72—

லால்குடி பேருந்து நிலையத்திற்கு கட்டிட வசதி ஏற்படுத்தல்.

*10379—திருமதி ஜெ. லோகாம்பாள் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி பேருந்து நிலையம் போதிய கட்டிட வசதி இல்லாமலும், இடவசதி இல்லாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதிய வசதிகள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இயங்கிவரும் பேருந்து நிலையம் போதுமானதாக உள்ளதால் பேருந்துகள் சென்று வருவதற்கோ, பொது மக்களுக்கோ இடையூறு ஏதுமில்லை.

(ஆ) பேரூராட்சி நிதி நிலைமை பற்றாக்குறையாக உள்ளதாலும், தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையம் போதுமானதாக உள்ளதாலும் தற்போது இயங்கிவரும் இடத்தைத் தவிர வேறு இடம் ஏதுமில்லை என்பதாலும் லால்குடி பேரூராட்சியில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து ஜெயங்கொண்டம், அரியலூர், சிதம்பரம், தஞ்சாவூர், அன்பில் ஆகிய அனைத்து ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகளும் மையமாக உள்ள லால்குடி வழியாகத்தான் செல்லுகின்றன. அனைத்துப் பேருந்துகளும் லால்குடி பேருந்து நிலையத்திற்குள் நுழையும் போதும், லால்குடி பேருந்து நிலையத்தை விட்டு வெளியே வரும்போதும் ஒரு குறுகிய பாலத்தின் வழியாகத்தான் வர வேண்டியிருக்கிறது. அதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் வகையில் மக்கள் நலன் கருதி புதிய பேருந்து நிலையத்தை அமைக்க அரசு ஆவன செய்ய முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடியில் பேருந்து நிலையத்தை ஏற்படுத்த பல்வேறு நிலைமைகளில் அந்த இடத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தாலும் நிலம் கிடைக்காத

சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தப் பகுதியில் நிலத்தை வாங்கித் தருவதற்கு ஏற்பாடு செய்வார்களானால் நிச்சயமாக பேருந்து நிலையம் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

73—

செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

*10881— திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண் டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செம்பனார் கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது குறித்து தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும், தற்போது உள்ளாட்சி நிறுவனங்களில் எவ்வித நிர்வாக மாற்றங்களும் செய்தல் கூடாது என அரசின் தடையாணை அமலில் உள்ளது. தடையாணை விலக்கப்பட்ட பின்பு உரிய கருத்துரு அரசுக்கு வரப்பெற்றால் பரிசீலிக்கலாம்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் தமிழ் நாட்டில் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. நிர்வாக வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை நடப்பு நிதி ஆண் டிலே இரண்டாகப் பிரிக்கும் செயற்குறி உள்ளதா என அறிய விரும்புகிறேன்.